சொல்லப்போனுல் இன்று கிராம முன்சீப்புகள், கர்ணம் 20,000 பேர் 25,000 பேர் இருக்கிருர்கள், அதற்கடுத்த ஊழியர்கள் சுமார் 25,000 பேர்கள் இருக்கிருர்கள், ஆக 50,000 பேர்கள் சம்பந்தமான இந்தப் பிரச்சினையின்மீது மிகவும் நிதானமாகவும், ஜாக்கிரதை யாகவும் முடிவினை மேற்கொள்ள வேண்டும். பரம்பரைச் சட்டம் இந்த மன்றத்திலே ரத்தாகி விட்டது என்பதால் அப்படியே நீக்கப் படுகிருர்கள் என்ற பொருள் இல்லை. புதிதாக வருகிற அந்தஸ்து, உயர்வுகள் ஆகிய நல்ல காரியங்களை இந்த அரசு மேற்கொண்டிருக் கிறது.

பருப்பு வகைகள்.

* 77 வினு—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினு விற்கு விடையளிப்பாரா—

திருச்சி, மதுரை மாவட்டங்களில் துவரை போன்ற பருப்பு வகைச் செடிகள் பயிரிடுவதற்கேற்ற செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: ஆம்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, இந்த ஆண்டு மதுரை மாவட்டத்தில் குவாலியர் பருப்பு வகையை அரசாங்கம் ஒன்றி யங்களின் மூலமாக வழங்கியது. ஆனுல் இப்படிப்பட்ட செடிகள் செடிகளாகவே வளர்ந்திருக்கின்றனவேதவிர பயன் தருவதாக அமையவில்லை. எனவே, மீண்டும் அரசாங்கம் இதனைப் பரிசீ லிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: 1968-69-இல் 288 டன் அளவிற்கு குவாலியர் 3 வகை துவரை விதைகள் மத்தியப் பிரதேசத்திலிருந்து வரவழைக்கப்பட்டது. அதில் மதுரை மாவட்டத்தில் மதுரைக் கோட்டத்திற்கு 6 டன்னும், திண்டுக்கல் கோட்டத்திற்கு 12 டன்னும், உசிலம்பட்டி கோட்டத்திற்கு 14 டன்னும், பெரியகுளம் கோட்டத்திற்கு 12 டன்னும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து கூடுதலாக 836 டன்கள் உற்பத்தியாகும் என்ற தகவல்தான் வந்திருக்கிறது. அங்கத்தினர் குறிப்பிடுகிறபடி செடியாகமட்டும் இருக்கிறது, விளைச்சல் இல்லை என்ருல் எந்தக் கிராமம் என்று தகவல் தந்தால், அது அந்தக் குறிப்பிட்ட நிலத்தில் ஏற்பட்ட கோளாறு அல்லது எதனுலே அந்த நிலை ஏற்பட்டது என்பதைப்பற்றித் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு அதுபற்றிக் கவனிக்கலாம். கூடுதலாக 836 டன்கள் உற்பத்தியாகும் என்ற தகவல்தான் வந்திருக்கிறது.

* 78 வினு.—திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

பருப்பு வகைகளின் பற்ருக்குறையைப் போக்குவதற்கு இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?